# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group I தேர்வு

பாடம் : இந்திய அரசியலமைப்பு

பகுதி : **அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள்**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப்-1 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# அரசமைப்புச் சட்டத் திருத்தங்கள்

**1951ஆம் ஆண்டின் முதலாம் அரசமைப்புச் சட்டத்திருத்தம்**

இந்திய அரசமைப்பிற்கான சட்டத்திருத்தத்திற்கான தேவை அரசமைப்பு செயலுக்கு வந்த முதல் பதினைந்து மாதங்களிலேயே உணரப்பட்டது. இச்சட்டத்திருத்தம் உறுப்புகள் 15, 19,85, 87, 174, 176, 341, 372 மற்றும் 376 ஆகியவற்றில் சில மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. மேலும் உறுப்புகள் 31A மற்றும் 31B ஆகியவற்றையும், ஒன்பதாம் அட்டவணையையும் கொண்டு வந்துள்ளது.

உறுப்பு 19இல் புதிதாகப் 'பொது ஒழுங்கு', 'வெளிநாடுகளுடன் நட்புறவு' மற்றும் 'குற்றங்களைப் புரிய தூண்டுதல்' என்ற புதிய வரையறைகளைக் கொண்டு வந்துள்ளது. 'வரையறை' (restriction) என்ற சொல்லுக்கு முன், 'காரணத்துடன் கூடிய' (reasonable) என்ற சொல்லையும் சேர்த்துள்ளது. மற்றும் தொழில், வணிகம் போன்றவற்றிற்கான தொழில் நுட்பத் தகுதிகளை கூறும் விளக்கத்தையும் அரசு தொழில் நடத்துவது பற்றிய விளக்கத்தையும் உறுப்பு 19(6)இல் சேர்த்துள்ளது.

உறுப்பு 15இல் புதிதாக வாசகம் 4, இச்சட்டதிருத்தத்தால் சேர்க்கப்பட்டுள்ளது. இது எந்தவொரு சமூக மற்றும் கல்வி வழி (குடிமக்களில்) பின் தங்கியவருக்கும், ஷெட்யூல்ட் வகுப்பினர் மற்றும் பழங்குடியினருக்கும் சிறப்பு வாசகங்களை அரசு மேற்கொள்ள வழிவகை செய்கிறது. இது செண்பகம் துரைராஜன் எதிர் சென்னை அரசு (AIR 1950 SC 124) என்ற வழக்கின் தீர்ப்பின் விளைவாக ஏற்பட்டதாகும்.

மேலும் சில நிலச்சீர்திருத்தச் சட்டங்களை, சட்ட எதிர்ப்பிலிருந்து பாதுகாக்க ஒன்பதாம் அட்டவணையும் உறுப்புகள் 31A மற்றும் 31B ஆகியவற்றையும் புதிதாக இச்சட்டத்திருத்தம் கொண்டு வந்துள்ளது.

**1955ஆம் ஆண்டின் நான்காம் அரசமைப்புத் திருத்தச் சட்டம்**

இந்த அரசமைப்புத் திருத்தச் சட்டம் உறுப்புகள் 31, 31A மற்றும் 305யையும் ஒன்பதாம் அட்டவணையையும் திருத்தியுள்ளது. சொத்து ஒன்று அரசால் கட்டாயமாகப் பறிக்கப்படும் போது அதற்கு நிகரான இழப்பீடு (சரியீடு) வழங்கப்பட வேண்டும் எனப் பேலா பானர்ஜி வழக்கில் வலியுறுத்தியதை முறியடிக்க இது கொண்டு வரப்பட்டது. எடுக்கப்படும் சொத்திற்கு நிகரான இழப்பீடு போதுமானதாக இல்லை என வழக்கிட முடியாது என்று இது கூறுகிறது. மேலும் இச்சட்டத்திருத்தம் எந்தத் தொழிலையும் தேசியமயமாக்க அரசுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் உறுப்பு 305யை திருத்தியுள்ளது. ஒன்பதாம் அட்டவணையின் கீழ்ப் புதிதாக 6 சட்டங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

### 1956ஆம் ஆண்டின் ஏழாம் அரசமைப்புத் திருத்தச் சட்டம்

குறிப்பிடத்தக்க சில மாற்றங்களை இச்சட்டத்திருத்தம் கொண்டு வந்துள்ளது. இதில் முக்கிய மானது, மாநிலங்கள் சீரமைப்பு ஆணையத்தின் பரிந்துரைகளைச் செயல்படுத்தக் கொண்டு வந்த மாற்றங்கள் ஆகும். இதன் தொடர்பாக உறுப்பு 1, முதலாம் அட்டவணை மற்றும் நான்காம் அட்டவணை ஆகியவை திருத்தப்பட்டன. முதலாம் அட்டவணைக்கு மாற்றாக வேறு அட்டவணை கொண்டு வரப்பட்டது. ஏற்கனவே வகைப்படுத்தப்பட்ட மாநிலங்கள் மாற்றியமைக்கப்பட்டன. இப்போது மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் என்ற இரு பிரிவுகள் மட்டுமே உள்ளன. பகுதி A, பகுதி B, பகுதி C, மாநிலங்கள் என்று பகுக்கப்பட்டது நீக்கப்பட்டு விட்டது. இதன் தொடர்பாக உறுப்புகள் 80, 81, 170, 171, 220, 230, 239, 240, 298 மற்றும் 371 ஆகியவைகளும் திருத்தப்பட்டன.

### 1963ஆம் ஆண்டின் பதினைந்தாம் அரசமைப்புத் திருத்தச் சட்டம்

இந்தத் திருத்தச் சட்டத்தின் கீழ் உறுப்புகள் 124, 128, 217, 217 (3), 222, 224A, 226, 297 மற்றும் 3112(2) ஆகியவை திருத்தப்பட்டன. உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு பெறும் வயது 60 லிருந்து 62 ஆக உயர்த்தப்பட்டது. ஓர் உயர்நீதிமன்றத்திலிருந்து இன்னொரு உயர்நீதிமன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்படும் உயர்நீதிமன்றத்திலிருந்து இன்னொரு உயர்நீதி மன்றத்திற்கு இடமாற்றம் செய்யப்படும் உயர்நீதிமன்ற நீதிபதிகள் உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமனம் பெற வழி வகுத்தது. தமது ஆள்வரையில் வழக்கு மூலம் எழுந்திருந்து. ஆனால் அந்த நபர் அல்லது அதிகாரக்குழு தனது ஆள்வரைக்கு வெளியே இருப்பினும் உறுப்பு 226இன் கீழ் நீதிப்பேராணை பிறப்பிக்க உயர்நீதி மன்றத்திற்கு அதிகாரமளித்தது. இது தேர்தல் ஆணையம் எதிர் வெங்கட்ட சுப்பாராவ் (AIR 1953 SC 210) என்ற வழக்கின் முடிவு காரணமாக எழுந்தது. பணியாளர் தேர்வாணையத் தலைவரின் அதிகாரத்தை விரிவுபடுத்தியது. மேலும் உறுப்பு 311(2) இன் கீழ் அரசு பணியாளருக்கு வழங்கப்பட்டிருந்த இரண்டாம் வாய்ப்பின் எல்லையைக் கட்டுப்படுத்தியது.

### 1963ஆம் ஆண்டின் பதினாறாம் அரசமைப்புத் திருத்தச் சட்டம்

இது உறுப்பு 19யைத் திருத்தியுள்ளது. பேச்சுரிமை, ஆயுதமின்றி அமைதியாகக் கூடும் உரிமை, சங்கங்கள் அமைக்கும் உரிமை ஆகியவற்றின் மீது கூடுதலாக இந்தியாவின் இறைமை மற்றும் ஒருமைப்பாடு ஆகியவற்றின் நலன்களுக்காக வரையறைகள் விதிக்க இது வழி வகுத்தது. தேசிய ஒற்றுமையை மேம்படுத்த நாடாளுமன்ற மற்றும் மாநிலச் சட்டமன்றத்திற்கு வேட்பாளராக நிற்பவர் இந்தியாவின் இறைமையையும், ஒருமைப்பாட்டையும் காப்பாற்ற உறுதியளிக்க வேண்டி உறுதிமொழி அளிக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இதற்காக உறுப்புகள் 84 மற்றும் 173 திருத்தப்பட்டன. பதவிப் பிரமாணத்திலும் இத்தகைய உறுதிமொழி சேர்க்கப்பட்டது. மூன்றாம் அட்டவணை இதற்காகத் திருத்தப்பட்டது.

**1971ஆம் ஆண்டின் இருபத்து நான்காம் அரசமைப்புச் சட்டத் திருத்த**

இந்த அரசமைப்பு திருத்தச் சட்டம் கோலக்நாத் எதிர் பஞ்சாப் அரசு (AIR 1967 SC 1643) என்ற உச்சநீதிமன்ற வழக்கின் தீர்ப்பின் முடிவினால் ஏற்பட்ட சிக்கலைத் தீர்ப்பதற்காகக் கொண்டு வரப்பட்டதாகும். இவ்வழக்கில் உறுப்பு 368இன் கீழ் உள்ள, 'சட்டத்திருத்தம்' என்பது உறுப்பு 13 பொருளின் படி, 'சட்டமாகும்' என்றும் சட்டத்திருத்தம் செய்யும் அதிகாரம் உறுப்பு 245இல் உள்ளது என்றும் கூறியிருந்தது. மேலும் உறுப்பு 368, சட்டத்திருத்தம் செய்யும் நடைமுறையை மட்டுமே கூறுகிறது என்று கூறியிருந்தது. இதனை நீக்கிட இந்தச் சட்டத்திருத்தம், 'உறுப்பு 368 சட்டத்திருத்தம் செய்வதற்கான அதிகாரத்தையும் நடைமுறையையும் கொண்டுள்ளது' என்று திருத்தியுள்ளது. மேலும் இந்தச் சட்டத்திருத்தம் உறுப்பு 13இல் நான்காம் வாசகத்தையும் சேர்த்துள்ளது. இது இந்த உறுப்பில் கூறப்பட்ட எதுவும் உறுப்பு 368 கீழ் ஆன சட்டத்திருத்தத்திற்குப் பொருந்தாது எனத் தெளிவாகக் கூறுகிறது. இந்தச் சட்டத்திருத்தத்தின் செல்லுபடி தன்மை கேசவானந்தபாரதி எதிர் கேரள அரசு (AIR 1967 SC 1643) என்ற வழக்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.

**1975ஆம் ஆண்டின் இருபத்து ஐந்தாம் அரசமைப்புச் சட்டத் திருத்தம்**

ஆர்.சி.கூப்பர் எதிர் இந்திய யூனியன் (AIR 1970 SC 564) (வங்கிகள் தேசிய மயமாக்குதல் வழக்கு) என்ற வழக்கு தீர்ப்பின் விளைவாக இந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வரப்பட்டது. உறுப்பு 31(2)இன் கீழ் உள்ள 'இழப்பீடு' என்ற என்ற சொல்லுக்குப் பதிலாகத் 'தொகை' (amount) கொண்டு வரப்பட்டது. உறுப்பு 31C என்ற புதிய உறுப்பும் இச்சட்டத்தினால் சேர்க்கப்பட்டது இது அரசை வழி செலுத்திச் செல்லும் நெறிமுறைகளில ஒன்றாகிய உறுப்பு 39 (b) அல்லது (c) யைச் செயல்படுத்த கொண்டு வரப்படும் சட்டம் உறுப்புகள் 14, 19 மற்றும் 31 ஆகியவைகளுக்கு முரணாக இருந்தாலும் செல்லும் என்பதைக் கூறுகிறது. இதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்கிட முடியாது எனவும் கூறுகிறது. உறுப்பு 31C இன் செல்லும் படி தன்மை கேசவானந்தபாரதி வழக்கிலும், வாமன் ராவ் எதிர் இந்திய யூனியன் [(1981)2 SCC 362)] வழக்குகளில் வினவப்பட்டு இவற்றின் செல்லுபடிதன்மை ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது.

**1975ஆம் ஆண்டின் முப்பத்து ஐந்தாம் அரசமைப்புச் சட்டத் திருத்தம்**

இந்தச் சட்டம் திருத்தம் வாயிலாக உறுப்பு 2A சேர்க்கப்பட்டது. மேலும் புதிதாகப் பத்தாம் அட்டவணையும் சேர்க்கப்பட்டது. (பின்னர் முப்பத்து ஆறாம் சட்டத்திருத்தத்தால் இவை நீக்கப்பட்டு விட்டன) உறுப்பு 2A சிக்கிம் மாநிலத்தை ஓர் இணைப்பு மாநிலமாகச் சேர்த்தது. இதன் பொருட்டு உறுப்புகள் 81 மற்றும் 82 திருத்தப்பட்டன.

**1975ஆம் ஆண்டின் முப்பத்து ஆறாம் அரசமைப்புச் சட்டத் திருத்தம்**

சிக்கிமை, இணைப்பு மாநிலமாக (Associate State) அன்றி முழுமை பெற்ற மாநிலமாகச் சிக்கிம் ஏற்படுத்தப்பட வேண்டும் என சிக்கிம் மக்கள் கோரியதால் இந்தத் திருத்தம் எழுந்தது. முதலாம் அட்டவணையில் சிக்கிம் ஒரு மாநிலமாகச் சேர்க்கப்பட்டது. உறுப்பு 371F சேர்க்கப்பட்டு, முப்பது

உறுப்பினர்களுக்குக் குறைவில்லாத உறுப்பினர்களைக் கொண்ட ஒரு சட்டப் பேரவையை ஏற்படுத்த வழிவகை செய்தது. இதன் காரணமாக முன்னர் சேர்க்கப்பட்ட பத்தாம் அட்டவணை நீக்கப்பட்டது. உறுப்புகள் 81ம் 82ம் இதற்கு ஏற்ற வகையில் திருத்தப்பட்டன.

**1976ஆம் ஆண்டின் நாற்பத்து இரண்டாம் அரசமைப்புச் சட்டத்திருத்தம்**

இந்த அரசமைப்புச் சட்டத்திருத்தம், பரந்த அளவில் மாற்றங்களைக் கொண்டு வந்தது. வரண்சிங் குழுவின் பரிந்துரை பேரில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. சட்டமுகப்புரை வழி செலுத்து நெறி முறைகள், உச்சநீதிமன்றம் யூனியன் மற்றும் மாநிலங்களிடையேயான தொடர்புகள், அரசுப் பணிகள், நெருக்கடிநிலை, சட்டத்திருத்தம் போன்றவற்றில் பல திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அடிப்படை கடமைகள் மற்றும் தீர்ப்பாயங்கள் புதிதாகக் கொண்டு வரப்பட்டன. உறுப்புகள் 39A, 43A, 48A, 114C, 131A, 226A, 228A மற்றும் 257A புதிதாக சேர்க்கப்பட்டன. 50 உறுப்புகள் திருத்தப்பட்டன. முக்கிய மாற்றங்களாவன.

சட்ட முகப்புரை : இதில் 'சமயச் சார்பற்ற' சமதர்ம மற்றும் 'ஒருமைப்பாடு' என்ற சொற்கள் புதியனவாகச் சேர்க்கப்பட்டன.

வழி செலுத்து நெறிமுறைகள்: இதற்கு முன்னர் உறுப்பு 39இன் வாசகங்கள் (b) அல்லது (c) குறித்து இயற்றப்படும் சட்டங்களுக்கு மட்டும் உறுப்புகள் 14, 19 மற்றும் 31க்கு எதிராகப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது. இந்தத் திருத்தச் சட்டம், இதனை உறுப்புகள் 39இன் கீழ் உள்ள அனைத்து வாசகங்களுக்கும் விரிவுபடுத்தியது. இது அடிப்படை உரிமையைவிட வழி செலுத்து நெறிகளுக்கு மேலாண்மையை வழங்கியது. (இவ்வாறு திருத்தப்பட்ட பகுதி, உச்சநீதிமன்றத்தால் பின்னர் மினர்வா மில்ஸ் வழக்கில் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது). புதிதாக உறுப்பு 39A (சமநீதி மற்றும் இலவச சட்டநீதி), உறுப்பு 43A (தொழிற்சாலைகளின் நிர்வாகத்தில் தொழிலாளர்களின் பங்கேற்பு) ஆகியவை சேர்க்கப்பட்டன. மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு மற்றும் காடுகள், வனவிலங்குகளின் பாதுகாப்பு) ஆகியவை குறித்த மூன்று உறுப்புகள் சேர்க்கப்பட்டன. உறுப்பு 39(f) திருத்தம் செய்யப்பட்டது.

அடிப்படைகடமைகள்: நாற்பத்து இரண்டாம் சட்டத்திருத்தத்தின் சிறப்புக் கூறு, இந்திய அரசமைப்பில் பகுதி IV-Aயைச் சேர்த்ததாகும். இந்தப் புதிய பகுதி, குடிமக்களுக்கான பத்து அடிப்படைக் கடமைகளை வலியுறுத்துகிறது. இவற்றை உறுப்பு 51A கொண்டுள்ளது.

யூனியன் : உறுப்புகள் 55, 81, 82, 170 ஆகியவை திருத்தப்பட்டன. உறுப்பு 74 திருத்தப்பட்டுக் குடியரசுத் தலைவர், அமைச்சர்கள் குழுவின் ஆலோசனைக்குக் கட்டுப்பட்டவர் என்பதை வெளிப்படையாகக் கூறுகிற நாடாளுமன்றத்தின் அதிகாரம் சிறப்புரிமை மற்றும் விலக்குக் குறித்து உறுப்பு 105(3) இல் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

நீதித்துறை : உறுப்பு 139A புதிதாகச் சேர்க்கப்பட்டது. இது உச்சநீதிமன்றத்திற்கு உயர்நீதிமன்ற வழக்குகளைத் தன்னிடம் மாற்றுவதற்கான அதிகாரத்தை வழங்குகிறது. மேலும் ஓர் உயர்நீதி மன்றத்திலிருந்து இன்னொன்றிற்கு மாற்றவும் அதிகாரமளிக்கிறது. இச்சட்டத்திருத்தம் உறுப்பு

226யையும் திருத்தியுள்ளது. உறுப்பு 226 ஆனது, உறுப்புகள் 13A மற்றும் 226A இக்கு உட்பட்டதாக ஆக்கப்பட்ட மைய சட்டத்தின் செல்லுபடி தன்மையை ஆராயத் தடை விதிக்கப்பட்டது. புதிதாகச் சேர்க்கப்பட்ட உறுப்பு 131A உச்சநீதிமன்றத்திற்கு மட்டும் இவ்வதிகாரத்தை வழங்கியது. புதிதாக உறுப்பு 228A சேர்க்கப்பட்டது. உறுப்பு 226இல் 'மற்ற வேறு எந்தச் செயலுக்காக' என்ற சொற்றொடர் நீக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதனால் உயர்நீதிமன்றத்தின் ஆள்வரை வரம்பு மாற்றியமைக்கப்பட்டது. (பின்னர் நாற்பத்து மூன்றாம் சட்டத்திருத்தத்தின் வாயிலாக உறுப்புகள் 225, 227, 228 அதன் முந்தைய நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. உறுப்பு 226A வும் நீக்கப்பட்டது).

யூனியன் மற்றும் மாநிலத் தொடர்புகள்: நாற்பத்து இரண்டாம் சட்டத்திருத்தம் ஏழாம் அட்டவணையில் உள்ள பட்டியல்களில் சில மாற்றங்களைக் கொண்டு வந்தது. இரண்டாம் பட்டியலிலிருந்து (மாநிலப் பட்டியல்) சில பொருள்களை மூன்றாம் பட்டியலுக்கு மாற்றியுள்ளது. இதன்படி, கல்வி, எடைகள் மற்றும் அளவுகள், காடுகள், வனவிலங்குகளையும், பறவைகளையும் பாதுகாத்தல் மற்றும் நிதி நிர்வாகம் ஆகியவை இரண்டாம் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டு மூன்றாம் பட்டியலுக்கு மாற்றப்பட்டது. மேலும் முதலாம் பட்டியலில் 2A என்ற பொருள் குறிப்புச் சேர்க்கப்பட்டது. இது கடுமையான சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேண, மைய அரசின் ஆயுதப்படையை மாநிலங்களில் அனுப்புவது குறித்ததாகும். இதனை உறுப்பு 257 உடன் சேர்த்துப் படிக்க வேண்டும். இதுவும் ஆயுதப்படையை மாநிலங்களின் உதவிக்கு அனுப்புவது குறித்தது. (பின்னர் 42வது திருத்தச் சட்டம் பொருள் குறிப்பு 2Aயை நீக்கிவிட்டது)

மேலும் உறுப்புகள் 191 (a) மற்றும் 192 ஆகியவை மாற்றியமைக்கப்பட்டன.

நெருக்கடிக்கால நிலை: இந்தியா முழுமையாக அல்லது பிரகடனத்தில் குறிப்பிடப்படும் அதன் ஏதாவது ஒரு பகுதி குறித்து என்ற சொற்றொடர் உறுப்பு 352இல் சேர்க்கப்பட்டது. இது குடியரசுத் தலைவருக்கு இந்தியா முழுமைக்கும் அல்லது ஏதாவது அதன் ஒரு பகுதிக்கு நெருக்கடிக் காலநிலையைப் பிரகடனம் செய்ய அதிகாரமளித்தது. ஏதாவது ஒரு பகுதியில் சாதாரண நிலை நிலவினால் நெருக்கடியை அங்கு நீக்கலாம். இதன் தொடர்பாக உறுப்புகள் 353. 356. 357. 358 மற்றும் 359 திருத்தப்பட்டன. மேலும் உறுப்பு 356(4)இல் குறிப்பிடப்பட்டிருந்த 'ஆறுமாதங்கள்' என்ற சொற்களுக்குப் பதிலாக ஓராண்டு என்ற சொல் மாற்றப்பட்டது. பின்னர் இதை ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு ஆண்டிற்கு நீட்டிக்கலாம். உறுப்பு 357இன் இரண்டாம் வாசகமும் மாற்றியமைக்கப்பட்டது.

அரசுப் பணிகள் : உறுப்பு 311 இன் கீழ் அரசுப் பணியாளருக்கு வழங்கப்பட்டிருந்த விசாரணையின் இரண்டாம் கட்ட நிலையில் இருந்த பிரதிநிதித்துவம் செய்யும் வாய்ப்பு இச்சட்டத் திருத்தத்தால் நீக்கப்பட்டு விட்டது. மேலும் 'அனைத்திந்திய நீதிப்பணிகள்' தொடக்க உறுப்பு 312 திருத்தப்பட்டது.

தீர்ப்பாயங்கள் : இச்சட்டத்திருத்தத்தில் முக்கியமானது தீர்ப்பாயங்களை ஏற்படுத்தியதாகும். உறுப்புகள் 323A மற்றும் 323B இதற்காக சேர்க்கப்பட்டன.

சட்டத்திருத்தம் : சட்டத்திருத்தம் குறித்த உறுப்பு 368இல் நாற்பத்து இரண்டாம் சட்டத்திருத்தம் புதிதாக வாசகங்கள் (4) மற்றும் (5) ஆகியவற்றைச் சேர்த்தது. எக்காரணம் கொண்டும் உறுப்பு 368இல் செய்யப்படும் சட்டத்திருத்தம் குறித்து நீதிமன்றத்தில் வினா எழுப்ப முடியாது என வாசகம் (4) கூறியது. உறுப்பு 368 இன் கீழ் அரசமைப்பு வாசகங்களில் செய்யப்படும் சேர்த்தல், மாற்றுதல் அல்லது நீக்குதல் போன்று திருத்துவதின் பேரில் நாடாளுமன்றத்தின் அரசமைப்புத் திருத்த அதிகாரம் மீது எவ்வித வரையறையும் இல்லை என்பதாக வாசகம் 5 தெளிவுபடுத்தியது. இது நாடாளுமன்றத்தின் மேலாண்மையை நிறுவும் எண்ணத்துடன் கொண்டு வரப்பட்டதாகும். எனினும் மேற்கண்ட இரு வாசகங்களும் மினர்வா மில்ஸ் வழக்கில் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டன.

மேற்கண்டவை நாற்பத்து இரண்டாம் சட்டத்திருத்தம் கொண்டு வந்த திருத்தங்களில் முக்கியமானவை ஆகும்.

### 1977ஆம் ஆண்டின் நாற்பத்து நான்காம் அரசமைப்புச் சட்டத்திருத்தம்

நெருக்கடி கால நிலையின் போது கொண்டு வரப்பட்ட நாற்பத்து இரண்டாம் சட்டத் திருத்தத்தினால் ஏற்படுத்தப்பட்ட பல மாற்றங்களை நீக்கும் எண்ணத்துடன் இந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வரப் பட்டதாகும். மேலும் இது உறுப்பு 19 (f) யை நீக்கியது வாயிலாகச் சொத்திற்கான உரிமையை ஒரு சாதாரண சட்ட உரிமையாக்கியது. உறுப்பு 22(4) இக்கு பதிலாக வேறு ஒரு வாசகம் கொண்டு வரப்பட்டது. ஆலோசனை வாரியத்தின் பரிந்துரையின்றித் தடுப்புக் காவலில் எவரையும் இரண்டு மாதத்திற்கு மேல் வைக்க அதிகாரமளிக்கக் கூடாது என இது கூறுகிறது. மேலும் ஆலோசனை வாரியத்தின் தலைவர் பதவியிலுள்ள உயர்நீதிமன்ற நீதிபதியாக இருக்க வேண்டும் என்றும் கூறுகிறது. உறுப்பு 22(7) (a) நீக்கப்பட்டது. உறுப்பு 31 நீக்கப்பட்டு விட்டது. இது கட்டாயமாகச் சொத்தினை எடுப்பது குறித்தது. எனினும் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்துதல் மற்றும் நிர்வகித்தல் குறித்த சிறுபான்மை யரின் உரிமைகள் பாதிக்கப்படவில்லை.

வழி செலுத்திச் செல்லும் நெறிமுறைகள்: உறுப்பு 38(2) சேர்க்கப்பட்டது. தனிப்பட்டவர் மற்றும் மற்றக் குழுவினரிடையேயான வருமானம் போன்ற ஏற்றத்தாழ்வுகள் குறைக்க முயற்சி எடுக்கப்பட வேண்டும் என இது கூறுகிறது.

குடியரசுத் தலைவர் : உறுப்பு 71 முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்டது. குடியரசுத் தலைவர் மற்றும் துணைக் குடியரசுத் தலைவர் தேர்தல் குறித்த தகராறுகள் உச்சநீதிமன்றத்தால் முடிவு செய்யப்பட வேண்டும் எனக் கூறுகிறது. முப்பத்து ஒன்பதாம் சட்டத்திருத்தத்தால் ஏற்படுத்தப்பட்ட மாற்றம் நீக்கப்பட்டுப் பழைய நிலைக்கே 44வது திருத்தம் கொண்டு வந்தது. உறுப்பு 74இல் ஒரு விலக்கு வாசகம் கொண்டு வரப்பட்டது. முன்னதாக 42வது சட்டத்திருத்தம் வாயிலாக அமைச்சரவையின் ஆலோசனை குடியரசுத் தலைவரைக் கட்டுப்படுத்தும் எனக் கூறியது. 44வது சட்டத்திருத்தம் அதைத் தக்க வைத்துக் கொண்டு, குடியரசுத் தலைவருக்கு ஒரு குறைந்த அளவிலான உரிமையை வழங்குகிறது. இதன்படி குடியரசுத் தலைவர் அவர்களது ஆலோசனையை மறுபரிசீலனை செய்ய

வேண்டும் என அமைச்சரவைக்கு கூறலாம். ஆனால் குடியரசுத் தலைவர் அந்த மறு பரிசீலனை படியிலான ஆலோசனைப்படி செயல்பட வேண்டும் எனக் கூறுகிறது.

நாடாளுமன்றம்: மக்களவையின் கால அளவு ஆறு ஆண்டுகளிலிருந்து மீண்டும் ஐந்தாண்டு கால அளவாக உறுப்பு 83(2)இல் மாற்றம் செய்யப்பட்டது. முன்னர் 42வது சட்டத் திருத்தத்தின் கீழ் இது ஆறு ஆண்டுகளாக மாற்றப்பட்டிருந்தது. உறுப்பு 103 மீண்டும் மாற்றியமைக்கப்பட்டது. இது உறுப்பு 102 (1 )இன் கீழ்க் கூறப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் தகுதியின்மையைக் குறித்தது. இச்சட்டத்திருத்தம் இவர்களது தகுதியின்மை குறித்து தகராறு எழுமானால் அது குடியரசுத் தலைவருக்கு அனுப்பப்படல் வேண்டும் என்றும் அவரது முடிவு இறுதியானது எனக் கூறுகிறது. உறுப்பு 105 (3)ம் திருத்தப்பட்டது. இது நாடாளுமன்ற உறுப்பினர்களின் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் பற்றியவை. உறுப்பு 123இன் நான்காம் வாசகம் நீக்கப்பட்டு விட்டது. இது குடியரசுத் தலைவர் பிறப்பிக்கும் அவசரச் சட்டத்தை குறித்தது. 38வது சட்டத்திருத்தத்திற்கு முன் இருந்த நிலைக்கு இது கொண்டு வந்துள்ளது.

உச்சநீதிமன்றம் : உறுப்பு 132இல் சில மாற்றங்களை இச்சட்டத்திருத்தம் ஏற்படுத்தியது. இது உயர்நீதிமன்றத்திற்கு வரும் மேன்முறையீடு பற்றியது. உறுப்பு 134A புதிதாகச் சேர்க்கப்பட்டது. இது உயர்நீதிமன்றம் மேன்முறையீடு குறித்து வழங்கும் சான்றிதழ் பற்றியது. 42வது சட்டத் திருத்தத்தால் கொண்டு வரப்பட்ட புதிய உறுப்பான 139A இல் சிறு மாற்றத்தை இது ஏற்படுத்தியது. இதன்படி உச்சநீதிமன்றத்திற்கு வழக்குகள் உச்சநீதிமன்றத்தால் (தாமாகவோ) அல்லது தரப்பினரின் மனுவின் பேரிலோ மாற்றப்படலாம்.

மாநிலச் சட்டமன்றங்கள் : 44வது சட்டத் திருத்தத்தால் உறுப்பு 172இல் முன் கொண்டு வரப்பட்ட சட்டமன்றத்தின் கால அளவான ஆறு ஆண்டுகள் மீண்டும் ஐந்தாண்டுகளாக மாற்றப்பட்டு விட்டன. உறுப்பு 192இல் திருத்தப்பட்டது. இது உறுப்பு 103 போன்றது. இதன்படி சட்டமன்ற உறுப்பினர்களின் தகுதியின்மையை இனி ஆளுநரே முடிவு செய்வார். உறுப்பு 194லிலும் மாற்றம் செய்யப்பட்டது. இது அவர்களின் அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமைகள் பற்றியது. உறுப்பு 213(4) நீக்கப்பட்டு விட்டது. ஆளுநரின் அவசரக்காலச் சட்டத்தைப் பிறப்பிக்கும் அதிகாரத்தை இது குறித்தது.

உயர்நீதிமன்றம் : உயர்நீதிமன்றத்தின் நீதிபதிகளின் நியமனம் பற்றிக் கூறும் உறுப்பு 217இல் முன்பு கூறப்பட்டிருந்த சிறப்பு வாய்ந்த சட்ட அறிஞரை உயர்நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கும் வாசகம் 44வது சட்டத் திருத்தத்தால் நீக்கப்பட்டு விட்டது. உறுப்பு 22 மேலும் திருத்தம் கொண்ட வரப்பட்டது. 42வது சட்டத்திருத்தத்திற்கு முன்னிருந்த நிலை கொண்டு வரப்பட்டது. வாசகங்கள் (3) மற்றும் (4) மாற்றியமைக்கப்பட்டன. இதைப் போலவே உறுப்பு 227இம் முன்னிருந்த நிலைக்கே கொண்டு வரப்பட்டுள்ளது.

உறுப்புகள் 239A, 329A மற்றும் 257A நீக்கப்பட்டுவிட்டன. உறுப்பு 257A மாநிலத்தில் மைய அரசின் ஆயுதப்படைகளை நிறுத்துவது பற்றியது. உறுப்பு 329A பிரதம மந்திரியின் தேர்தல் பற்றியது.

44வது சட்டத்திருத்தம் பகுதி XII இல் புதிதாக அத்தியாயம் IVயைக் கொண்டு வந்து உறுப்பு 300A இன் வாயிலாகச் சட்ட அதிகாரத்தின்படி அன்றி எவரும் தமது சொத்தினை இழக்க முடியாது எனக் கூறுகிறது.

நெருக்கடி கால நிலை: நாற்பத்து நான்காம் அரசமைப்புத் திருத்தச் சட்டம் உறுப்புகள் 352, 356, 358 மற்றும் 359 ஆகியவைகளில் பெரும் மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. 1975ஆம் ஆண்டில் ஏற்பட்ட கசப்பான நிகழ்வுகளைக் கருத்தில் கொண்டு செய்யப்பட்டவை இவைகளாகும். உறுப்பு 352இல் கொண்டு வரப்பட்ட முக்கியத் திருத்தங்களாவன : வாசகம் (1) இல் கூறப்பட்டிருந்த 'உள்நாட்டு அமைதிக் குலைவு' என்பதற்குப் பதிலாக 'ஆயுதக் கிளர்ச்சி' என்ற சொற்கள் கொண்டு வரப்பட்டன. எழுத்து வடிவிலான அமைச்சரவையின் முடிவு பேரிலன்றி நெருக்கடி நிலையைக் குடியரசுத் தலைவர் பிறப்பிக்கக் கூடாது என்பது அடுத்ததாகும். அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி, 1975இல் அமைச்சரவையைக் கலந்தாலோசிக்காமல் பரிந்துரை செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்து நெருக்கடி நிலை பிரகடனம் பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்குள் நாடாளுமன்றத்தால் ஏற்கப்பட வேண்டும் என்பதாகும். முன்பு இது இரண்டு மாதங்களாக இருந்தது. வாசகம் (5)இன் கீழ் இனி நாடாளுமன்றத்தால் ஏற்கப்படும் பிரகடனம் ஆறு மாத கால அளவிற்கு மட்டுமே செயலில் இருக்கும். இதற்கு முன் காலவரையறையன்றி இருந்தது. நெருக்கடி கால நிலையை முடிவுக்குக் கொண்டு வரச் சாதாரண பெரும்பான்மை உறுப்பினர்களின் தீர்மானம் போதும். வாசகம் (5)இல் இருந்த 'இறுதியானது' என்ற சொல் நீக்கப்பட்டு விட்டது.

உறுப்பு 356 இன் கீழும் இரு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன.

ஒன்பதாம் அட்டவணை : ஒன்பதாம் அட்டவணையில் இருந்து இச்சட்டத்திருத்தத்தால் 87, 92 மற்றும் 130 ஆகிய சட்டங்கள் நீக்கப்பட்டு விட்டன.

நாற்பத்து நான்காம் சட்டத்திருத்தம் இவ்வாறு நாற்பத்து இரண்டாம் சட்டத்திருத்தத்தினால் கொண்டு வரப்பட்ட தேவையற்ற மாற்றங்களை நீக்கி விட்டது. மேலும் மக்களாட்சி முறை மேம்பாட்டிற்கான முக்கிய மாறுதல்களைக் கொண்டு வந்துள்ளது.

**2002ஆம் ஆண்டின் எண்பத்தாறாவது அரசமைப்புச் சட்டத்திருத்தம்**

86வது சட்டத்திருத்தமானது புதிதாக உறுப்பு 21Aயைச் சேர்த்துள்ளது மற்றும் ஏற்கனவே இருந் 45வது உறுப்பை புதிதாக மாற்றி அமைத்துள்ளது. மேலும் உறுப்பு 51Aஇல் புதிய வாசகம் (k) யைச் சேர்த்துள்ளது.

புதிய உறுப்பாகிய21A, கல்விக்கான உரிமையை (Right to Education) வழங்குகிறது. ஆறு வயதுககு மேல் பதினான்கு வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்குமான இலவச மற்றும் கட்டாய கல்விக்கு இது வழி வகுக்கிறது. இது தொடர்பாக அமைந்தது தான் புதிதாக மாற்றியமைக்கப்பட்ட உறுப்பாகிய 45 ஆகும். இது ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு இளம் சிறார் கவனத்திற்கும் கல்விக்கும் வகை செய்ய கூறுகிறது. உறுப்பு 51 (k) பெற்றோர் அல்லது காப்பாளர் மீது தமது குழந்தைக்கு கல்விக்கான வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற கடமையை விதிக்கிறது. இது 12.12.2002இல் குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்றது.

**2003ஆம் ஆண்டின் தொண்ணூற்றி ஒன்றாவது அரசமைப்புச் சட்டத்திருத்தம்**

91வது அரசமைப்புச் சட்டத் திருத்தமானது, உறுப்பு 75இல், வாசகம் (1A) மற்றும் (1B) ஆகியவற்றையும், உறுப்பு 164இல் உறுப்பு வாசகம் (1A) மற்றும் (1B) ஆகியவற்றையும் மற்றும் உறுப்பு 361A இக்கு பின்னர் புதிய உறுப்பு 361 Bயையும் சேர்த்துள்ளது.

உறுப்புகள் 75 மற்றும் 164 ஆகியவை முறையே மைய மற்றும் மாநில அமைச்சர்கள் பற்றியதாகும். உறுப்பு 75 (1A) நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பதினைந்து சதத்திற்கு மேற்பட்ட அமைச்சர்களின் எண்ணிக்கை இருக்கக் கூடாது என்றும், உறுப்பு 164 (1A), மாநில சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் பதினைந்து சதத்திற்கு மேற்பட்டு அமைச்சர்களின் எண்ணிக்கை இருக்கக் கூடாது என்றும் கூறுகிறது.

**2005ஆம் ஆண்டின் தொண்ணூற்றி மூன்றாவது அரசமைப்புச் சட்டத்திருத்தம்**

93வது அரசமைப்புச் சட்டத் திருத்தமானது உறுப்பு 15இல், 15(5) என்ற உறுப்பைச் சேர்த்துள்ளது.

கல்வி நிறுவனங்களில் சேர்க்கைக்காக (Admissions) சமூக மற்றும் கல்விவழி பின் தங்கியவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், அவர்களது மேம்பாட்டிற்காக சட்டம் வாயிலாக சிறப்பு வகைபாடுகளை அரசு செய்ய உறுப்பு 15இன் புதிய ஐந்தாவது வாசகம் வழிகோலுகிறது. இவ்வாறு செய்யப்படுவதற்கு உறுப்பு 15இல் உள்ளவையோ அல்லது உறுப்பு 19(1) (g) இல் கூறப்பட்டவையோ அரசைத் தடுக்காது. கல்வி நிறுவனங்கள் அரசு உதவ பெற்றவைகளாகவோ அல்லது அவ்வாறு அல்லாமலோ இருக்கலாம்.

இது உறுப்பு 30(1) இல் கூறப்பட்ட சிறுபான்மையோருக்கான கல்வி நிறுவனங்களைத் தவிர்த்து மற்ற அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் (தனியார் கல்வி நிறுவனம் உட்பட) பொருந்தும்.

இந்த சட்டத்திருத்தம் 20.1.2006 அன்று குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்றது.

**2006ஆம் ஆண்டின் தொண்ணூற்றி நான்காவது அரசமைப்புச் சட்டத்திருத்தம்**

94வது அரசமைப்புச் சட்டத் திருத்தமானது உறுப்பு 164இல் திருத்தம் செய்துள்ளது.

இச்சட்டத் திருத்தமானது அட்டவணை வகுப்பினர் மற்றும் பிற்பட்ட வகுப்பினர் ஆகியோர் நலவாழ்விற்கு மட்டுமின்றி கூடுதலாக சத்தீஸ்கர், ஜார்கண்ட் மாநிலங்களில் மலை சாதியினரின் நலத்திற்காக கூடுதலாக அமைச்சர் ஒருவரை நியமிக்க வழிவகை செய்கிறது. இது ஏற்கனவே இருந்த 'பீகார்' என்ற சொல்லுக்குப் பதிலாக 'சத்தீஸ்கர்' மற்றும் 'ஜார்கண்ட்' என்றச் சொற்களை சேர்க்கிறது.

இச்சட்டத்திருத்தம் 12.6.206 அன்று குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்றுள்ளது.

## வினாக்கள்

1. இந்திய அரசியலமைப்பின் சட்டத்திருத்தங்களில் முக்கியமானவற்றை எடுத்துரைத்து. அதனை விவரி?